


வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன் தலைமையிலும், வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி., முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொங்கல் பரிசோடு ரூ. 3 ஆயிரம் ரொக்கம் அளிக்கப்படும் என்று அறிவித்து பொங்கல் திருவிழாவை கொண்டாட்டமாக மாற்றியமைக்கும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் 20 ஆண்டு கால ஓய்வூதிய கனவை நனவாக்கியது, 10 இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி (லேப்டாப்) வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு விழுமியங்கள் அடங்கிய தீர்மானங்களை கழக நிர்வாகிகள் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டது. உடன் காட்பாடி தொகுதி தேர்தல் பொறுப்பாளர் குறிஞ்சி சிவா ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாநில, மாவட்ட, மாநகர, கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



கழக தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விராட்டிக்குப்பம் மேல்நிலைப்பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் ஒன்றிய கழக செயலாளர் மும்மூர்த்தி,ஆர்.முருகன்,கவுன்சிலர் கிருத்திகா சதீஷ்,ஆவின் தண்டபாணி,ஆறு.சங்கர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுப்ரமணி,விவசாய தொழிலாளர் அணி அசோக்சதாசிவம், தொகுதி ஒருங்கிணைப்பாளர் சுந்தர்,குரு, சத்தியமூர்த்தி,ஒன்றிய தொண்டரணி சுப்ரமணி,தொண்டரணி கோபு,கிளை செயலாளர்கள் ராஜவேல், பிரபாகரன்,சுகுமார்,அண்ணலசுமி ஆறுமுகம், சோழவெங்கட்,விஜய்பரத் மற்றும் மாவட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

"வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறுவதையொட்டி

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி - மாவட்ட- மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் மகளிர் அணியினர் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திமுக நாடாளுமன்றக் குழு தலைவர், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அறிவுறுத்தலின்படி, வருகின்ற 09.01.2026 வெள்ளிக்கிழமை, காலை 10.00 மணி அளவில், வடலூர் மங்கையர்கரசி திருமண மண்டபத்தில், "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" திமுக டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு சம்மந்தமாக, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணியின் மாவட்ட- மாநகர- ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் தலைவர், துணை தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் மகளிர் அணியினர் ஆலோசனை கூட்டம் எனது தலைமையிலும், கழக மகளிர் அணி செயலாளர் ஹேலன்டேவிட்சன், மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப.ராணி, மகளிர் அணி இணை செயலாளர் குமரிவிஜயக்குமார், மகளிர் தொண்டர் அணி இணை செயலாளர் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., டெல்டா மண்டல மகளிர் அணி பொறுப்பாளர் ரேகாபிரியதர்ஷினி, மகளிர் அணி துணை செயலாளர் ஆ.அங்கையர்கண்ணி, மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

அது சமயம் இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட - மாநகர- நகர - பகுதி - பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மகளிர் துணை செயலாளர்கள், முன்னாள் இந்நாள் மகளிர் உள்ளாட்சி பிரதிநிதிகள், மகளிர் மாநகர மேயர், பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற மகளிர் உறுப்பினர்கள், முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள், துணை தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், மாவட்ட ஒன்றிய குழு உறுப்பினர்கள் மற்றும் கழக மகளிர் அணியினர், மகளிர் தொண்டர் அணியினர் அனைவரும் தவறாமல் பெருந்திரலாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

1. ஜனவரி 26 தஞ்சையில் நடைபெறும் வெல்லும் தமிழ்ப் பெண்கள் திமுக டெல்டா மண்டல மகளிர் மாநாடு,
2. திராவிட பொங்கல் மகளிர் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது சம்மந்தமாக.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

ரவிச்சந்திரன் தலைமை! மரக்காணம் மத்திய ஒன்றியத்தில்

# "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பரப்புரை நிகழ்ச்சி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை!

மரக்காணம், ஜன 8- விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதிமரக்காணம் மத்திய ஒன்றியம் சிறுவாடி முறுக்கேரி ஊராட்சியில் என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது. மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை நிகழ்ச்சியை தொடங்கி வைத்து கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்தார்.

அப்போது அவர் பேசுகையில்: சொன்னதை செய்து கொண்டிருக்கிற ஆட்சி தி.மு.க. ஆட்சி.கலைஞர் வழியில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தினந்தோறும் ஒவ்வொரு திட்டங்களை தீட்டி வருகிறார் அந்த வகையில் பொங்கல் பண்டிகை கொண்டாடுகின்ற ஒட்டுமொத்த தமிழ் சமுதாய மக்களுக்கும் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூபாய் 3000 பொங்கல் பரிசு தொகுப்பினை அறிவித்துள்ளார்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில் நடைபெறக்கூடிய திராவிட மாடல் ஆட்சியின் அனைத்து திட்டங்களும் ஒவ்வொரு இல்லத்திலும் ஒவ்வொரு உள்ளத்திலும் சென்று அடைந்துள்ளது. அந்த வகையில் முதலமைச்சர் செய்த அனைத்து திட்டங்களையும் சாதனைகளையும் ஒவ்வொரு இல்லமாக சென்று கழக நிர்வாகிகள் எடுத்து கூற வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் ரவிக்குமார், பாபு, வடிவேல், சுமதி பார்த்தசாரதி, செல்வம், நாராயணசாமி, முருகன், கோபி, சண்முகம். சங்கர், செந்தாமரை, அப்துல் அக்பர்,கோபி, சண்முகம், அண்ணாமலை, அஜித், ராஜா, குமார், துளசிதாசன், முருகன், காளியப்பன், சண்முகம், ரமேஷ்ஊராட்சி நிர்வாகிகள் முருகானந்தம், வேலாயுதம், அந்தோணி தாஸ் ,தேவா, விஜயகுமார், ஜெகநாதன், திருமலை, மாணவரணி பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் விழுப்புரம் நகரம், 39 வது வார்டு, சாலாமேடு, சிங்கப்பூர் நகர் பகுதியில் புதிதாக கட்டப்பட்ட நியாயவிலைக்கடை கட்டிடத்தை திறந்து வைத்து, ரேஷன் பொருட்களை வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கடலூர் கிழக்கு மாவட்டம்,கம்மாபுரம் தெற்கு, வடக்கு, மத்திய மற்றும் கெங்கைகொண்டான் பேரூர் தி.மு.க. சார்பில், சமத்துவம் பொங்கட்டும்,தமிழ்நாடு வெல்லட்டும் இரண்டு நாட்கள் ஆண்களுக்கான கிரிக்கெட் மற்றும் பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், மந்தாரக்குப்பம் என்.எல்.சி மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. கெங்கைகொண்டான் பேரூர் கழக பொறுப்பாளர் கே.சுரேஷ் தலைமை தாங்கினார். ஒன்றிய கழக செயலாளர்கள் கே.ஆர்.ராயர், பா.திருமாவளவன், பி.சுந்தர பாண்டியன், தொகுதி பொறுப்பாளர் எம்.கே.சிவா ஆகியோர் முன்னிலை வகித்து போட்டியை துவக்கி வைத்தனர். இந்நிகழ்வில் தமிழரசன், வீரராகவன், மதிமுருகன், பெலிக்ஸ், ஆறுமுகம், சேகர், பாலகிருஷ்ணன், செந்தில்குமார், அப்பாஸ், கார்த்திகேயன், தீன்முகமது உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# திருவரங்குளத்தில் மாபெரும் கபடி போட்டி!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தனர்!

புதுக்கோட்டை, ஜன.8- துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் 48வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருவரங்குளம் தெற்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மின்னொளி கபாடி போட்டி பிடாரியம்மன் கோவில் திடலில் நடைபெற்றது. விழாவிற்கு தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் அரு.வடிவேல் தலைமை தாங்கினார். டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை ஒருபதி, கே.பி.கே. டி.தங்கமணி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கபாடி போட்டியை துவக்கி வைத்தார். புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான கபடி அணியினர் கலந்து கொண்டு முதல் பரிசு ரூபாய் 48,000, இரண்டாம் பரிசு 38 ஆயிரம், மூன்றாம் பரிசு 28000, நான்காம் பரிசு 18000 ஆயிரத்தை தட்டிச் செல்வதற்கான வீர விளையாட்டான கபடி ஆட்டம் இரண்டு நாட்கள் நடைபெற்றது. இதில் முதல் பரிசு புதுக்கோட்டை மாவட்டம் பூங்குடி இளம் பறவை கபடி அணியினரும், இரண்டாம் பரிசு தஞ்சாவூர் மாவட்டம் சென்னம்பட்டி இளம் பூக்கள் அணியினரும், மூன்றாம் பரிசு திருவரங்குளம் மூவேந்தர் கபடி அணியினரும், நான்காம் பரிசு, அரியானிபட்டி புதிய பறவை கபடி அணியினரும் பெற்றனர். ரொக்கப் பரிசு மற்றும் கோப்பையினை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் கோப்பை மற்றும் பரிசுகளை வழங்கி சிறந்த ஆட்டக்காரர்களுக்கு ரொக்க பரிசை வழங்கினார். மற்றும் வெற்றி பெற்ற அணி வீரர்களுடன் குழு போட்டோ எடுத்துக் கொண்டார். மிகப் பிரமாண்டமான முறையில். சிறப்பான ஏற்பாடுகளை செய்த திருவரங்குளம் தெற்கு ஒன்றிய கழக இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பால பிரபாகரன் , பா.அஜய் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகளை பாராட்டினார். இரண்டு நாள் நடைபெற்ற மின்னொளி கபடி போட்டி நிகழ்ச்சியில் மாவட்ட திமுக பிரதிநிதி எம்.எஸ். முருகன், ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம்,தெற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஓய்வு ஆசிரியர் ஆறுமுகம், தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர்கள் கே.வி. சண்முகசுந்தரம், பிரசாந்த், சுமதி கருப்பையா, எஸ்.எம்.குமரேசன், ஜெய்சங்கர் ஒன்றிய பொருளாளர மாவட்ட பிரதிநிதி வீர.மெய்யர், திருவரங் குளம் தெற்கு ரத வீதி வை.ராஜா, ஒன்றிய பிரதி என். ஆத்மநாதன், நிருபர் எஸ் பாலு, கோவை என். முத்துக்குமார், முகமது கனி, சிங்க ராஜன், நின்ப நேஸ்வரம் காயாம்பூ, துரை.மெய்யர், திருக்கட்டளை சி.முத்துக்குமார், வக்கீல் பூங் குடி எம்.சிவா கண்ணதாசன், ராஜா சரவணன், வீர.பாலாஜி, ஆர்.வி.செல்வம், உஷா செல்வம், கே.பி. கே.டி. கலை, வம்பன் நாள் ரோடு.ஆர்.எம்.அயுப்கான், பரமசிவம், ராஜா பெரியண்ணன் பாலையூர், வெள்ளைச்சாமி, காயாம்பட்டி பாண்டியராஜன், வேப்பங்குடி ராஜாங்கம், கொத்தகோட்டை

பிரகதாம்பாள், புதுக்கோட்டை கார்த்திக் மெஸ் மூர்த்தி, மேட்டுப்பட்டி சின்னத்துரை, பொன்னகர் செந்தில் குமார், லோகேஷ் செந்தில், மகளிர் அணி விஜயா, சாந்தி, பாண்டியம்மாள், வி.மணிகண்டன், ஆர். பாலமுருகன், சிவா, சிராஜ், சேதுராமன், ஆர். ஸ்டாலின், ஏ. விஜயகுமார், கே.ரெங்கராஜ், கே.எம். ஆர்.ஆனந்த், ஹனிபா, மணிகண்டன், ரவி, மகேஷ், கண்ணன், சஞ்சய் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், இளைஞர்கள், பொதுமக்கள் மகளிர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை ஒன்றிய இளைஞரணி சார்பில் துணை அமைப்பாளர்கள் பால.பிரபாகரன், பா. அஜய் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் செய்திருந்தனர். இதில் மாவட்ட ஒன்றிய பேரூர் கழக கிளைக் கழக நிர்வாகிகள் இளைஞர் மகளிர் பொதுமக்கள் கலந்து கொண்டு கபடி போட்டிகளை கண்டுகளித்தனர். முடிவில் இளைஞர் அணி ஆர். மணிகண்டன் நன்றி கூறினார்.




விழுப்புரம் தெற்கு மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம், கொங்கராம் பூண்டி ஊராட்சிகளில் உள்ள வாக்குசாவடி எண் 241 ஆகிய வாக்கு சாவடியில் என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி பரப்புரையை துவக்கி வைத்து சாதனை விளக்க துண்டு பிரசுரங்களை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி வழங்கி 2026 தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். ஜெ.ஜெயபால், மீனா வெங்கடேசன், சாவித்திரி பாலு, ரவிச்சந்திரன், ராம்குமார், கலைச்செல்வன், ராமலிங்கம், பூபாலன் செல்வம், ஐ.கே.சங்கர், திவாகர், ஊராட்சி மன்ற தலைவர் சாவித்திரி, கிளைச் செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி , த.வினோத், மகளிர் அணி அஞ்சலாட்சி, வாக்குசாவடி முகவர்கள், பாக நிலை முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி. இராசரத்தினம்
### சனவரி 8 (1993)



செங்கற்பட்டு மாவட்டக் கழக அவைத் தலைவராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து பூவிருந்தவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நான்குமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.

பூவிருந்தவல்லி ஒன்றிய பெருந்தலைவர், பூவிருந்தவல்லி பேரூராட்சித் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.

விலைவாசி உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி ஓராண்டு சிறை தண்டனை அனுபவித்தவர்.

"தோடிக்கு ஒரு இராசரத்தினம், தொகுதிக்கு ஒரு இராசரத்தினம்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**